# நாவிதர் நாகலிங்கம்

## பொன் குலேந்திரன் கனடா

சிகை அலங்காரத் தொழில் காலத்தோடு மாறிக் கொண்டு வருகிறது. பத்து தசாப்தங்களுக்கு முன்னர் சிகை அலங்காரம் செய்வதற்கு அலங்காரம் செய்யும் கடைக்கு செல்வது அரிது. வீட்டுக்கு வந்து நாவிதம் செய்வது மரபு வழி வந்த முறையாகும். பாரம்பரியமான குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக நாவிதர் ஒருவரைச் சவரம் செய்ய வைத்திருப்பர். இது பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த முறையாகும். இவரைக் குடிமகன் என அழைப்பர். இழவு வீடு, திருமணம், சாமத்தியச் சடங்கு போன்ற காரியங்களுக்கு அவர் வண்ணானுடன் சமூகம் தர தவறமாட்டார். இருவருக்கும் வீட்டுக்கு முன்னே விசேஷத்திற்காக கட்டிய வாழைக்குலைக்கு போட்டிக்கும் குறைவில்லை. திருமணத்தின் போது மணமகளுக்கு செய்ய வேண்டிய காரியங்களை அம்படச்சி செய்வது வழக்கம். இது ஒரு தேசவழமை என்றே சொல்லலாம். காரியங்கள் முடிந்த பின்னர் குடிமகனுக்குத் தேவையான வெகுமதிகள் கொடுத்து அனுப்புவது வழமையாயிருந்து வந்தது. இந்த முறை, படிப்படியாக மறைந்து போகிறது என்றே சொல்லாம்.

நாவிதர் நாகலிங்கம் எங்கள் குடும்பத்தின் குடிமகன். எனக்கு தெரிந்தளவில் அவர் பாட்டனார் காலம் தொட்டு எமது வீட்டுக்கு கையில் ஒரு தகரப் பெட்டியுடன் வருகை தந்து, சிகை அலங்காரமும் சவரமும் செய்வது வழமை. தேவையான வடிவில் மீசையை

வெட்டுவார். அதுவும் வெட்டும் மீசை பொலீஸ்காரனுக்காக இருந்தால் அந்த  மீசைக்கு தனி கம்பீரத் தோற்றமுண்டு. முகத்துக்கு ஏற்ற அளவில் மீசை இருக்கும். பாலையா, ஹிட்லர், எம்.ஜி.ஆர், பாகவதர் மீசை என சினிமா நட்சத்திரத்துக்கு ஏற்ப மீசைகள் வெட்டும் திறமை படைத்தவர் நாகலிங்;கம். எங்கள் வீட்டு அம்பலவி மாமர நிழலில் மாமரத்துக்கு கீழ் ஒரு கதிரையை போட்டு அதற்கு மேல ஒரு வெள்ளைத் துணியை விரித்து விட்டு, தன்தகரப்பெட்டியைத் திறந்து, கத்தரிக்கோலையும் சவரக்கத்தியையும் தீட்டிவிட்டு தன் தொழிலை ஆரம்பிப்பார் நாகலிங்கம். அவர் வாய் நிரம்ப வெற்றிலை போட்டுக்கொள்வார். புகையிலையையும், பாக்கையும், சுண்ணாம்பையும் வாயுக்குள் புதைத்து சப்பி சுவைப்பார். வேற்றிலையை மடிக்குள் வேட்டியில் பவுத்திரமாக மடித்து வைத்திருப்பார். அடிக்கடி  ஊர்கதை சொல்லும் போது சிகப்பு நிற வெற்றிலை சாறு தெறிக்கும். அது என் உடம்பு மேல் போர்த்திருக்கும் வெள்ளை துணியில் கோலம் போடும். பொறுத்துக் கொள்வேன் அவர் சொல்லும் கதையின் ஆர்வத்தில். அதுவும் சிந்தாமணி, சிவகவி படப் பாடல்கள் என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். தன் வாயுக்குள் தனக்குத் தெரிந்த இராகத்தில் முணுமுணுப்பார் இதற்கு தாளம் போடுவது போல் இருக்கும் அவரது கத்தரிக்கோல் போடும் ஒசை. தன் தகரப் பெட்டிக்குள் அவர் வைத்திருக்கும் தியகராஜ பாகவதிரின் படம் தன் பாடலை ரசிகனின் குரலில்   கேட்டு ரசித்துக்கொண்டிருகுகம்

***

எனக்குத் தலைமயிர் வெட்ட நாகலிங்கம் பத்துமணிக்கு சனிக்கிழமை வரப்போகிறான்; என்று அம்மா கொன்னால் அது நான் விரும்பாத நாளாக இருக்கும். காலையில் நண்பர்;களோடு கிரிக்கட் விளையாட

போக முடியாதே. தலைமயிர் வெட்டிய பின்னர் கிணற்றில் குளிர்ந்த தண்ணீர் அள்ளி குளிக்க நேரம் எடுக்கும். நாகலிங்கம் எங்கே கூர்மையான தன் கத்தியால் வெட்டி காயப்படத்தி போடுவானோ என்ற பயம் எனக்கு. ஆனால் கையில் சவுக்காரம் போன்ற ஒன்றை பாதுகாப்பாக வைத்திருப்பார். அதை முகத்தில் வைத்தால் எரியும் தன்மையுடையது.

“தம்பி பயப்படாதையும் நான் உமது பாட்டனாருக்கு தலைமுடி வெட்டினவன். அம்மாவைக் கேளும் அவ சொல்லுவா. உமது இரண்டு தம்பிமாருக்கும் அப்பாவுக்கும் வெட்டியிருக்கிறன்.”

“அதெல்லாம் எனக்குத் தெரியும்!...

“இப்ப என்ரை முடியை கட்டையாக வெட்டி போடாதையும் பிறகு நண்பர்கள் பள்ளிக்கூடத்துக்கு போகும் போது பகிடி பண்ணுவார்கள்”

“தம்பி!... உமக்கு பிடித்த ஸ்டைல் எனக்குத் தெரியும். இப்போ பெடியல்களுக்கு ஆயபnகைiஉநவெ மக்னிபிசென்ட் செவென் (Magnificent Seven)படத்தில் வந்த யூல் பிரேயினர் (Yul Breyner) மாதிரி மொட்டை அடிப்பது பிடிக்கும். சிலருக்கு அமெரிக்க பாட்டுக்காரன் எல்விஸ் பிரஸ்லி ஸ்டைல் பிடிக்கும். அந்த ஸ்டைல் வேண்டுமா அல்லது மொட்டை விருப்பமோ?. அம்மாவை கேட்டுவிட்டு வெட்டட்டே”?

“வேண்டாம். அம்மா சொன்ன மாதரி எப்பவும் வெட்டுகிற ஸ்டைலில் வெட்டும். பிறகு ஏன் அவவோடை எனக்கு பிரச்சனை”

“சரி!.. கண்ணடியைப் பிடித்துக் கொள்ளும். நான் வெட்டுவது தெரியும்.” என்று கூறியபடி என் கையில் சிறு கண்ணாடி ஒன்றைத் தந்தார் நாகலிங்கம். எல்லாம் ஆயத்தமாகத்தான் வந்திருக்கிறார். அவரது

கைபெட்டிக்குள் தேவையான உபகராணங்கள் அணைத்தும், வேற்றிலையும்  பாக்கும் சுண்ணாம்பும் சேர்த்திருந்தது.

நாகலிங்கம் வேலை செய்யும் போது ஊர்க் கதைகள் சொல்லுவார். யார் யாரைக் காதலித்து திருமணம் செய்தது. எந்த பெடியன் படிப்பில் கெட்டிக்காரன். எவா தகப்பன் என்ன வேலை செய்கிறார். என்ன சம்பளம் எடுக்கிறார். என்ன சாதியைச் சேர்ந்தவர். கண சாதிகளைப்பற்றயும் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்த விபரமும் அவருக்கு எப்படி தெரியும்? பல விஷயங்களை அறிந்து வைத்திருந்தார். நடக்காத கொலை கேசுகள், பேய் கதைகளைக் கூட உருவாக்கிச் சொல்லுவார். அளுத்கடை சண்டியனுக்கு தலைமயிர் வெட்டுவதினால் அவனைப்பற்றி புகழ்ந்து பேசுவார். அதே போல் போஸ்ட் மாஸடர் பொன்னையருக்கு தலை முடி வெட்டும் போது இலங்கை தபால சேவையைப் பற்றி பராட்டிப் பேசுவார்.

“என்ன நாகலிங்கம் பிறரை பற்றிச் சொல்லுகிறீர். ஆனால் ஊமது குடும்பம் பற்றி ஒன்றுமே பேசவில்லையே”... நான் அவரை கேட்டேன்.

“என் மூத்த மகன் கணக்கில் படு கெட்டிக்காரன். தான் படித்து யூனிவர்சிட்டிக்கு போய்  பட்டம் பெற்று பெரிய அரச உத்தியோகம் பார்க்க வேண்டுமாம். சவரம் செய்யும் தொழிலை வெறுப்பவன். நான் இப்படி வீடு வீடாகப் போய் தொழில் செய்து சம்பாதிப்பது  அவனைப் படிக்க வைக்க வேண்டும். என்பதுக்காக  எனது இரண்டாவது மகன் முத்துலிங்கம் சிகை அலங்காரக் கடையொன்றை ஆரம்பித்துள்ளான். அவனின் மாமனார் பண உதவி செய்துள்ளார். என் மகள் ஏ லெவல்

படிக்கிறாள். வடிவானவள். அவள் படித்து டாக்டர் பட்டம் பெறவேண்டும் என்பது என் ஆசை” என்று தன்னைப் பற்றிய விபரம் சொன்னார்.

சில நாட்களாக நாகலிங்கம் முடிவெட்ட வீட்டுக்கு வரவில்லை. பிறகு தான் அம்மா சொல்லி தெரிய வேண்டி வந்து நாகலிங்கத்துக்கு நாக்கில் புற்று நோய் என்று. மகரகம புற்று நோய் ஆஸ்பத்திரிக்கு  கீமோ செய்ய போனவர் போனவர்தான். அவர் திரும்பி வராமல் அவருடைய மரணச் செய்திதான் வந்தது. வெற்லையும், புகையிலையும், சுண்ணாம்பும் சேர்த்து சாப்பிடாதையும். என்று நான் எவ்வளவு சொல்லியும் அவர்கேட்கவில்லை.

அவர்; மறைவுக்கு பின்னர் மகன் முத்து சவரத் தொழிலை பொறுப்பேற்று சிறப்பாக நடத்தினான். குடிமகன் பட்டம் அவனுக்கு மாறியது. குறிப்பிட்வர்களின் வீடுகளுக்கு மாத்திரம் போய் முடி அலங்காரம் செய்து வந்தான். தகப்பனைப் போல். முத்துலிங்கம் வெற்றிலைப் பிரியன் அல்ல. முடி வெட்டும் போது ஊர்கதை பேச மாட்டான். வேலையில் கவனம். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பவன்.  விரைவில், கோண்டாவில்லில் ஒரு முடி வேட்டும் கடை ஒன்றை ஆரம்பித்தான்.;. அதை கவனிக்கும் பொறுப்பு அவருடைய மைத்துனருடையது. தன் தங்கச்சியின படிப்புச் செலவை அவன் கவனித்துக்கொண்டான். அவள் ;படித்து டாக்டர் பெற்று வந்து தன்னை கவனித்துக்கொள்வாள் என்ற நம்பிக்கை அவனுக்கு. ஆனால் நடந்தது வேறு. மருத்துவக் கல்லூரியில படித்து டாக்டர் பட்டம் பெற்ற அவள், தன்னோடு படித்துப் பட்டம் பெற்ற சிங்களவரன் ஒருவனைக் காதலித்து தமையனுக்கு தெரியாமல் திருமணம் செய்து கொண்டாள். இருவரும் பெற்றோருக்குத் தெரியாமல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்துவிட்டார்கள்.

****